Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரண௵ ஆவணிமீ ௨௦௨ (1944 செப்டம்பர்மீ 14 வியாழக்கிழமை) [இல சசு

## யுத்தச் செய்தித் திரட்டு

*

### மற்றோர் தீவில் அமெரிக்கர் இறங்கினர்

லண்டன் செப் 10—

டச்சு கியூகினியைச் சேர்ந்த பியாக் தீவுக்கப்பாலிருக்கும் ஸோபியோரி என்ற தீவில் அமெரிக்கப் படைகள் சென்ற வியாழக்கிழமை இறங்கியிருப்பதாயும் அவைகளுக்கு ஜப்பானியர்களிடமிருந்து அதிகமான எதிர்ப்பு இல்லையென்றும் உத்தியோக தோரணையில் ஜெனரல் மாக் ஆர்தர் இன்று அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க கடற்படையும் விமானப்படையும் பலாயு தீவைக் கடுமையாகத் தாக்கிவிட்டு வந்த விபரமும் இதே அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பானிய நகரங்கள்மீது பெருவாரியான குண்டுகளைப் பொழிந்து அழித்து ஜப்பான்மீது இறுதியான போராட்டத்தை ஆரம்பிப்பதுபற்றியே சர்ச்சில்-ரூஸ்வெல்ட் மகாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படுமென்பதற்கான அறிகுறிகள் அதிகம் தென்படுவதாய் குவிபெக்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

### ஜப்பானை வீழ்த்தும் பெரிய வேலை

பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரியான மிஸ்டர். அந்தோனி இடன் கெனில்வர்த்தில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

'ஜெர்மனியை முறியடிப்பதோடு ஜப்பானை வீழ்த்தும் பெரியவேலையும் நமக்குக் காத்திருக்கிறது. அவர்களுடன் நாம் கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு பெரிதும் இருக்கிறது. ஜப்பானை முறியடிக்கும் போரில் நாம் பரிபூரணமாகப் பங்குபற்றிக்கொள்ள உத்தேசித்திருக்கிறோம்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த பல இடங்களை அவர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். எனவே ஜெர்மனியைப்போலவே ஜப்பானையும் வீழ்த்திப்பூரணவெற்றி ஈட்ட நாம் உறுதியாகத் தீர்மானித்திருக்கிறோம்.'

### ஜெர்மனிக்குள் அமெரிக்கப் பீரங்கிகள் குண்டுப் பிரயோகம்

லண்டன் செப் 11—

ஜெர்மன் எல்லைப்புறத்திலிருந்து 11 மைல் தூரத்திலுள்ள நேசதேச வரிசைகளிலிருந்து அமெரிக்க பீரங்கிகள் ஜெர்மனிக்குள் குண்டுப்பிரயோகம் செய்கின்றனவென்று வேவியர்ஸிலிருந்து இன்று கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

பெல்ஜியம், லக்ஸம்பேர்க் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நேசதேசப் படைகள் எதிர்த்து முன்னேறுகின்றன, ஜெர்மனியர் தங்களால் திரட்டக்கூடிய எல்லாவற்றையும் ஒன்று திரட்டி யுத்தமுனைக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறனர்.

கனேடியப் படைகள் பெல்ஜிய கடற்கரைநெடுக முன்னேறி லீபுருக் நகரத்தைப் பிடித்துவிட்டன. அமெரிக்க முதலாவது சேனையையும் பிரிட்டிஷ் இரண்டாவது சேனையையும் தடுத்து நிறுத்துவதற்காக ஜெர்மானியர் டென்மார்க்கிலிருந்து படைகளைக் கொண்டுவந்து யுத்தகளத்தில் திணித்துக்கொண்டிருக்கின்றனர்.

இவ்விரு நேசதேசப் படைகளும் ஜெர்மனியின் கைத்தொழிற் பகுதியைநோக்கிப் பாய்ந்து சென்றுகொண்டிருக்கின்றன. பிரிட்டிஷ் படைகள் அலபேர்ட் கால்வாயைக் கடந்துவிட்டன.

அமெரிக்க ராணுவ தலைமைக் காரியாலயத்திலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபரான எரிஸ்டென்டன் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஜெனறல் பட்டனின் படைகள் நான்ஸிக்கு அருகிலுள்ள மகிநோ அரண் கோட்டையொன்றைக் கைப்பற்றிவிட்டன. பைனெட்டுகளையும் எறிகுண்டுகளையும் எடுத்துக் கொண்டுசென்ற அமெரிக்கர் அந்த நகரத்தைப்பிடித்துவிட்டனர்.

### வேறோர் நாஜி ரகசிய ஆயுதம்

பர்மிங்ஹாமில் டட்லி பிரபு பின்வருமாறு கூறினர்:-

"வேறோர் புதுரகமான இரகசிய ஆயுதத்தை ஜெர்மானியர் பிரயோகிக்கலாம். ஆதலின் நாம் நமது தற்காப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்திக்கொண்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகும்"

### அமெரிக்க கடற்படை பலம் பெருகுகிறது

வாஷிங்டன், செப் 10

இந்த நிதிவருடத்தில் அமெரிக்க கடற்படைக்கு 6 லட்சம்பேர் பயிற்சிக்காக எடுக்கப்படுவர் என்று கடற்படை மந்திரியான திரு. பொரஸ்டல் தெரிவித்திருக்கிறார்.

ஜப்பானுக்கு எதிராகச் சண்டை செய்வதற்கு அடுத்தவருட யூன் மாதத்துக்கிடையில் 3,389000 பேர் வரை கடற்படையில் சேர்க்கப்படுவர்.

### சத்துரு கப்பல்கள் தாக்கப்பட்டன

கெய்ரோ, செப் 10

கிரீஸ் கடற்கரை யோரத்திலிருந்து வெகு தூரத்திலுள்ள இலக்குகளையும் சத்துரு கப்பல்களையும் மத்திய கிழக்கு விமானங்கள் குண்டுகள் வீசித் தாக்கின.

கடந்த வாரத்தில் நடைபெற்ற விமானச் சண்டையில் கிரீட்டிலுள்ள விமான நிலையத்தை நமது விமானங்கள் தாக்கியதில் நமக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

## குவிபெக் மகாநாட்டின் நோக்கம்

### 'ஜப்பானின் தலைவிதியைத் தீர்மானிப்பதே'

ஹாலிபாக்ஸ், செப் 11

நேற்றுப் பிற்பகல் பிரதமமந்திரி திரு. சர்ச்சிலும், அவரது மனைவியாரும் ஹாலிபாக்ஸ் துறைமுகத்தில் வந்திறங்கினார்கள். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு திரு. சர்ச்சில் ஜனாதிபதி ரூஸ்வெல்டோடு மகாநாடு நடத்துவதற்காக குவிபெக்குக்குப் பிரயாணமானார்.

ஜப்பானைப் பூரணமாக அடித்து வீழ்த்துவதில் பிரிட்டன் கூறியிருக்கும் வாக்குகளை உறுதி செய்வதுதான் இந்த மகாநாட்டின் முதலாவது நோக்கமென்று திரு. சர்ச்சில் கூறியதாக குவிபெக்கிலுள்ள அதிகார பூர்வமான வட்டாரங்கள் தெரிவித்தன.

"நாம் இங்கு வந்திருப்பது இது முதல் தடவையல்ல. ஆனால் நிலைமை இவ்வளவு அனுகூலமாக எப்போதுமே இருந்ததில்லை. நேசதேசங்களின் லட்சியங்கள் எப்போதுமே இவ்வளவு சீக்கிரம் பூர்த்தியடையு மென்று எதிர்பார்க்கப்படவில்லை" என்று குவிபெக் நகரத்துக்குப் புறப்படுமுன் பிரதம மந்திரி கூறினார்.

1941ம் ஆண்டிற்குப்பிறகு இதுவரை பிரதம மந்திரியும் ஜனாதிபதி ரூஸ்வெல்டும் ஒன்பது தடவை சந்தித்துப் பேசியிருக்கின்றனர். முதலாவது மகாநாடு 1941ம் ஆண்டு ஆகஸ்ட்மாதம் 14ந் திகதி அட்லாண்டிக் சமுத்திரத்தின் நடுவில் பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் கப்பலில் நடைபெற்றது. அப்போதுதான் அட்லாண்டிக் சாஸனம் ஜனனமானது.

கடந்த ஆண்டு கெய்ரோவில் அவர்கள் சந்தித்துப் பேசிவிட்டு டெஹிரானில் மார்ஷல் ஸ்டாலினுடன் மகாநாடு நடத்தினர்.

### "ஜப்பானின் தலைவிதியை நிர்ணயிக்கும்"

முந்திய குவிபெக் மகாநாடு, இரண்டாம் போர்முனைக்கான திட்டங்களைத் தீர்மானித்ததுபோல் இந்த மகாநாடு ஜப்பானின் தலைவிதியைத் தீர்மானிக்குமென்று நியூஸ் குரானிக்கல் பத்திரிகையின் அரசியல் நிருபர் கூறுகிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:—

'முதலாவது குவிபெக் சந்திப்பில் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் இப்போது வெற்றியளித்து வருவது கண்முன் தெரிவதால், இந்தச் சந்திப்பை ஜப்பானிய இராணுவ பீடம் பயத்தோடும் எச்சரிக்கையோடும் கவனித்துவரும். ஜப்பானை ஒருவருடத்திற்குள் அடித்து வீழ்த்துவதற்கு அமெரிக்காவுக்குப் பிரிட்டன் பூரண உதவி செய்யுமென்ற தமது முந்திய வாக்குறுதியை திரு. சர்ச்சில் புதுப்பிப்பாரென்று கருதுகிறது.

"ஜப்பானை வீழ்த்துவதில் பிரிட்டன் பங்கெடுப்பதைப் விவாதிக்க பிரதம மந்திரி, உயர்தர இராணுவ அதிகாரிகளும் ஆலோசகர்களுடனும் குவிபெக்குக்குப் போயிருக்கிறார்."

### ஈடனும் ஹல்லும் கலந்து கொள்வர்

குவிபெக் மகாநாட்டில் பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி திரு. அந்தோனி ஈடன், அமெரிக்க அரசாங்க காரியதரிசி திரு. கார்டல் ஹல் ஆகியவர்களும் கலந்துகொள்வார்களென்று குவிபெக்கில் அறியப்படுகிறது.

அதிகாரிகளும் ஆலோசகர்களும் குவிபெக்கில் வந்து இறங்கிய வண்ணமாகவே இருக்கின்றனர்.

### பம்பாய் தீவிபத்தின் காரணங்கள்

புதுடில்லி, செப் 11

ஏப்ரல்மாதம் 14ந் திகதி பம்பாய்த் துறைமுகத்தில் நடைபெற்ற தீ விபத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட கமிஷன், தனது விசாரணையைப்பற்றிய முதலாவது அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. கப்பலில் நடந்த தீ விபத்தில் 231 பேர் கொல்லப்பட்டனர்; 478 பேர் காயமடைந்தனர். வெளியேயிருந்தவர்களில தீயணைப்பு வீரர்களும் துறைமுகத் தொழிலாளிகளும் ஊர்ச்சனங்களுமாக 500 பேர் கொல்லப்பட்டனர். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர்கள் மொத்தம் 2496 பேர்.

தீ விபத்தினால் ஏற்பட்ட சொத்துச் சேதம் பல லட்சம் பவுண் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

#### 5 காரணங்கள்

தீ விபத்துக்கும் பின்வரும் ஐந்து காரணங்களையும் கமிஷன் எடுத்துக் காட்டியிருக்கிறது.

(1) வெடி மருந்துகளும் உக்கிர வெடிமருந்துகளும் ஏற்றப்பட்ட கப்பல்களை துறைமுகத்துக்குள் கொண்டு வந்தது.

(2) பஞ்சுச் சிப்பங்களை வெடி மருந்துகளுக்குச் சமீபத்தில் வைத்திருந்தது.

(3) எதிர்பாராத விதமாகப் பஞ்சு தீப்பிடித்துக்கொண்டது,

(4) ஸ்தலத்திலிருந்த அதிகாரிகள் உடனே தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தவறியது,

(5) தகுந்த அதிகாரங்களுடன் கூடிய தீயணைப்புக்கோஷ்டி ஸ்தலத்தில் இல்லாமற் போனது.

வேண்டுமென்று சதி செய்து இந்தத் தீவிபத்து ஏற்பட்டிருக்குமென்று கருத முடியாதென்பதாக கமிஷன் அபிப்பிராயப்படுகிறது. பஞ்சு சிப்பங்களுக்கு நெருப்புப் பிடிக்க கவனமில்லாமல சிகரெட் துண்டுகள் வீசப்பட்டதுதான் காரணமென்றும் கமிஷன் கருதுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து பயிலும் பருவ மங்கை

(கொழும்புத்துறை, பண்டிதர். வீ. கே. பி. நாதன்)

"பிறர் அறிவை மயக்குமொரு கருவமிருக்கு மங்கைப் பருவத்தாள்"—அழகு ததும்பும் கலை ஓவியம்—அன்ன நடையிலும் ஒரு சின்ன நடை பயிலும் நடையினள். அவள் கை அசைந்தால் வளையல் ஒலியிலே நம் மனம் கலக்கிறது. அவள் கால் நடை நம் எண்ணங்களை எடை போடுகிறது. அவளது கண் வீச்சிலே நாம் நம்மையே மறந்து விடுகிறோம். அவ்வளவு அழகு சொட்டுகிறது அணங்கின் அங்க அசைவுகளிலே! அதில்லாமலா கோபிகாதங்கமணியின் பரதநாட்டியம் என்றால் மக்கள் கும்பல் கும்பலாகக் கூடுகிறார்கள்.

சாதாரண மக்களுக்கே இப்படி என்றால்—கலையின் புதல்வனும் கவிஞன்—அழகின் அன்பனை, சௌந்தரியப் பித்தனைப்பற்றிக் கேட்க வேண்டுமா? அப்படியே ஸ்தம்பித்து விடுகிறான் அழகுக் காட்சியில். கண்கள் அள்ளிப்பருக உள்ளம் துள்ளிக்குதிக்கிறது. இதயத்தின் ஒலி கவியாகப் பாய்கிறது. கவியின் மெருகுகளுடன் பாவையே தோன்றுகின்றாள் பாட்டிலே. ஆட்டமே ஒலிக்கிறது கவியின் அடிகளிலே!

நாட்டியம் என்றால் சில கட்டுப்பாடுகளுக்கிணங்கப் பாவத்தோடு ஆடுவது; இதுமட்டுந்தான் அழகாக இருக்குமா? பெண்ணின் அசைவே விண்ணுக்கேற்றும் — ஆடவர் மனத்தைத்தான்—இரசவாதமாக விளங்குகிறதே! பின் எந்த ஆட்டமாக இருந்தால்தான் என்ன? ரசிகன் பாடு ஆபத்தான். இப்படியென்றால் "நாலடி முன்னேயோங்கிப் பத்தடி பின்னேவாங்கிப் பந்தடிபயிலும்" ஒரு சுந்தரியின் காட்சி கசக்கவா போகிறது.

அவள் அழகசௌந்தரி, கம்மியன் கை பட்டுக்காய்ச்சி வெட்டித் தீரா மல் செம்மலரோன் கைமலரால் செய்துவிட்ட பொற்பாவை. பந்து பயில்கிறாள்—தன்னைமறந்த உற்சாக வெறியிலே பந்தாடுகிறாள். அதை ஒரு கவிஞர் ரசித்து நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பெண் என்றால் கைகளில் வளையல்களில்லாமலா போகுமா? அவள் ஆட்டத்திலே வளையல்கள் ஆடுகின்றன, "கலின், கலின்" என்ற அவற்றின் ஓசை "ஜெயம், ஜெயம்" என்று தொனிக்கிறதாம். பந்தாட்டத்தில் அவளுக்குக் கிடைத்த வெற்றியை எண்ணி அவைகள் ஜெயபேரிகை கொட்டுகின்றனவாம்! காற்சிலம் போசை புலம்பலாகத் தொனிக்கின்றது. ஆடா! அதற்கு மட்டும் என்ன வருத்தம் வந்து விட்டது.

அவளுக்கு "உண்டோ? இல்லையோ?" என்று ஆச்சரியக்கத்தக்க சிற்றிடை தன்னை மறந்த பரவசவெறியிலே எங்கே அது துடியிடை ஒடிந்துவிடுமோ என்றபயம் இடையைத் தாங்கும் காலகளை அணி செய்யும் சிலம்புகளுக்கு உண்டாகிவிட்டனவாம். அதனால் தான் அவை ஏங்கப் புலம்புகின்றன. இந்த அனுதாபத்தில் தண்டைகளும் கலந்து கொண்டன. "இடை—சங்கதமென்று புலம்பு சிலம்பொடு—தண்டை கலந்தாட" என்கிறார் கவிஞர்.

வேறு எவை ஆடுகின்றன? "இரு கொங்கை கொடும்பகை வென்றனமென்று—குழைந்து குழைந்து" ஆடுகின்றனவாம். அவை மகிழ்வதற்குக் காரணமென்ன? தங்கள் தலை தங்கள் எதிரியைத் தோற்கடித்துவிட்டனவாம்! அவளைவிடவுமா அவைகளுக்கும் வேற்று தாமென எதிர் யார்? உருண்டு திரண்டு பூத்து வட்டமிட்டு அண்ணாந்து இடங் கொண்டு விம்மி இணைகொண்டிறுகி ஆண்கள் மனதைக் கவர்ந்த கொங்கைகளுக்கு உதாரணமாகப் பந்தைக் கூறுவது வழக்கம். ஒப்பிட வந்து நின்றதனால் பந்து "பகை" என்று நயமாகக் கூறப்பட்டுள்ளது. இது கவி மரபு. முகத்திற்குப்பகை மலர், நெற்றிக்குப் பகை பிறை என்றெல்லாம் இலக்கியத்திலே காணக்கிடக்கின்றது. அந்தச் சுந்தரி தானும் பந்துமாக ஆடிய ஆட்டத்திலே தான் வெற்றிபெற்று விடுகிறாள். "செங்கையில வளை கலின் கலினென்று—ஜெயம் ஜெயமென்றாட", "எங்கள் பகைவன் தரையோடு வீழ்ந்தான்" எனப் பூரித்து மார்பகத்தே குவிந்த முளரி மொட்டுக்கள் குலுங்குகின்றனவாம்.

இப்படிப் பந்தாடும் பாவையார்? என்றும் சொல்லிவிடுகிறார் கவி. அவள் வேறு யாருமில்லைக் குற்றாலத்திலே உறைகின்ற நங்கை வசந்தசவுந்தரி தான்! ஆனால் அடுத்தாற்போல, அவருக்கே சந்தேகம் வந்து விடுகிறது. "இவள் இந்திரையோ? அழகெல்லாம் திரண்டு உருப்பெற்ற சுந்தரியோ?" என அதிசயிக்கிறார், "துள்ளாத துள்ளி ஆடும் அணங்கின்பாதங்கள் பூமியில் மேவவில்லையே! தேவலோக வாசிகளுக்குத்தானே அத்தன்மை உண்டு என்பார்கள்; ஒருவேளை இந்த நடனசிங்காரி தெய்வ ரம்பைதானோ?" என்ற சந்தேகமும் அவர் மனத்தில் எழுகின்றது. இல்லாவிட்டால், முன்பு அம்புலியுடனும் அமுதத்துடனும் பாலாழி நடுவே எழுந்த மோகினிபோ என்று கூட நினைக்கின்றார். இந்தச் சங்கடங்களுக்கெல்லாம் விடையளிக்க அவர் மனதிற்கு நேரமில்லை, அது அவனை விட்டு அவள் ஆட்டத்திலேயே லயித்து விடுகிறது:

பந்து மேலே மேலே போகிறது, அதைத் தொடர்ந்து அவளது சேலனைய கண்களும் மேலே பாய்கின்றன. பந்தைத் தட்டவேணும் என்ற எண்ணத்துடனே மனமும் விரைகிறது, அந்த நோக்குடன் வளை அணிந்த கை முந்துகிறது. இந்த நான்கு காரியங்களும் ஒன்று போல நடைபெறுகின்றன. அவ்வளவு துரிதமாக, அவை ஒன்றை கொன்று பின்னிடாமல் போட்டி போடுகின்றனவா?

இதைக் காணும் கவி பிரமித்து விடுகிறார். "மனம் முந்தியதோ? விழி முந்தியதோ? கரம் முந்தியதோ?" என வியக்கிறார். இவ்விதம் பந்து பயின்றனள் வசந்த சவுந்தரி ஒய்யாரி என்று காட்டுகிறார் பாடலிலே.

இப்பாடல்கள் குற்றாலக் குறவஞ்சியிலுள்ளன. பாடியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இப்பாடல்களைப் பாடிப் பாடி மகிழ மனம் தூண்டும். அத்தகைய தூண்டுதலை எழுப்பும் தன்மை வாய்ந்ததுதான் உண்மைக் கவிதைகள்: இனிமேல் அவற்றைப் படியுங்கள்.

"செங்கையில் வண்டு கலின் கலீ
 னென்று
ஜெயம் ஜெய மென்றாட—இடை
சங்கத மென்று புலம்பு சிலம்பொடு
 தண்டை கலந்தாட — இரு
கொங்கை கொடும்பகை வென்றன
 மென்று
குழைந்து குழைந்தாட — மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
 பந்து பயின்றனளே! (1)

இந்திரையோ இவள் சுந்தரியோ தெய்வ
 ரம்பையோ மோகினியோ
மந்தரமோ விழி முந்தியதோ கர
 முந்தியதோ எனவே — உயர

# புராண மகிமை

(சரவணை கதிர்வேலாயுத சுவாமி கோவிலில், தாரணவருஷம் ஆடிப்பூரணையும் திருவோண நட்சத்திரமுங் கூடிய சுக்கிரவாரத்தன்று இரவு. வேலணைச் சைவசித்தாந்தசபைத் தலைவரும் நடராச வித்தியாசாலை அதிபருமாகிய ஸ்ரீமாந் செ. கனகசபாபதிப்பிள்ளை அவர்களால் செய்யப்பெற்ற பிரசங்கச் சுருக்கம்,

(முற்றொடர்)

அன்பர்களே! சாகத்தீவாசன் புத்திரர்களாகிய சூரன், பதுமன், சிங்கன், தாருகன் என்னும் நால்வரும் பூர்வசென்ம தவப்பயனால் சூரன் மயிலாகவும் பதுமன் கோழியாகவும் சுப்பிரமணியப் பெருமானுக்கு வாகனமாகவும் கொடியாகவும் ஆட்பட விரும்பித் தவஞ்செய்தார்கள், சிங்கன் துர்க்காதேவிக்கு வாகனமாகவும், அரிகரபுத்திரராகிய ஐயனாருக்கு வாகனமாகிய யானையாகவும் அடிமைப்பட விரும்பித் தவஞ்செய்தபொழுது நீங்கள் நீங்கள் எங்கள் வாகனங்களுக்குக் கோள் சொல்லிப் போர் தொடுத்தமையாலும் மயில் முதலிய வாகனங்கள் உங்கள் தவத்தைக் கெடுத்துப் பகைவரச் செய்தமையாலும், அவுணர்களாகப் பிறந்து தேவர்களை வருத்துங்கால் நாம் வந்து உங்களை அடிமைகொண்டு உங்களுக்கு உங்கள் விருப்பப்படி ஆட்கொள்ளுவோம் எனச் சுப்பிரமணியப் பெருமான் துர்க்காதேவி ஐயனார் ஆகிய கடவுளர் வரங்களைப்படி பதமுத்தியை நால்வரும் பெற்றனர். முன்னைய வாகனங்களும் கொடியுமாயவர்கள். தயக்கு முன்னுள்ள சுழுதியர்களாவர். இதனால் கோள் சொல்பவர்கள் கேட்பவர்கள் அதனைக்கேட்டுப் பதிலாகப் பழிசெய்பவர்கள் தீராப் பழிக்கு ஆளாவார்களெனத் தெளியக்கிடக்கின்றது;

சிவநேயச் செல்வர்களே! சிவதூஷணஞ் செய்த தக்கன் யாகத்தின் பாவசேஷத்தை அனுபவிக்க வேண்டிய தேவர்கள் சூரபன்மன் முதலிய அவுணர்களால் அளவில் காலம் செய்யத்தகாத இழி தொழில்களைச் செய்தும் அவ்வவுணர் செய்த கொடுந் தண்டங்களைத் தாங்க முடியாதவர்களாய், திருக்கைலாசபதியை வேண்டிப் புலம்ப அப்பெருமான் திருவுளமிரங்கி அவதாரமாகக் குமாரபெருமானைத் தமது திருக்கண்களாற் றோற்றுவித்துத் தம சத்தியாராம் உமையம்மையாரது திருவடியிலமைந்த நவரத்தினங்களிற் றோற்றிய சத்திகளிடத்து வீரவாகுதேவர் முதலிய வீரர்களையும் இலக்கம் வீரர்களையும் தோற்றுவித்து, தேவர் ஆழ்க்கணைகளையும் சிறையையும் நீக்கியருளும்படி திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட பெருமான் வீரவாகுதேவரை வினித்துச் சூரபன்மனிடம் பாய தேவர் சிறையை விடுவிக்கும்படி ஏவ அவர் மறுத்தமைகண்டு குமாரப்பெருமான் தாமே சைனியஞ்சூழ மகேந்திர எல்லைசென்று சூரபன்மனோடு யுத்தஞ் செய்யும் பொழுது, சூரபன்மன் செய்த மாயங்களழிய தமது விசுவரூபத்தை யவனுக்குக் காட்டியருளினார். அப்பொழுது ஆச்சரியகரமுடைய சூரபன்மனுக்கு "சிறிது நல்லுணர்ச்சியுண்டாக வினையன் செப்புகின்றான்" எம்பெருமான் சந்நிதியில் வருந்துமறு செய்யச் சொல்லுகின்

> சந்திர சூடர் குறும்பல வீசுரர்
> சங்கணி வீதியிலே — மணிப்
> பைந்தொடி நாரி வசந்த சவுந்தரி
> பந்து கொண்டாடினளே!" (2)

இத் திருக்குற்றாலக் குறவஞ்சியை எழுதியவர் இற்றைக்கு இருநூற்றுப் பூப்பது வருடங்களுக்கு முன்பு தாகத் திருக்குற்றாலத்துக் கருகேயுள்ள நன்னகரமென்னு மூரிலுள்ளவராவர். ஆசிரியர் புலவர் திருக்குற்றாலத் தல புராணமும் வேறு பிரபந்தங்களுக்கும்

றான். என் கொலுமண்டபத்துக்கு இக்கடவுள் தூதாக விடுக்கவந்த வீரவாகு என்னுந் தூதுவன் குமாரக்கடவுள் என்று சொன்னதைக் கேட்டு நான் பாலகன், குழந்தை, சிறுவன் எனக் கருதினேன். அந்நாட் கருதின கருத்துக்கு மாறாக இப்போ இக்கடவுளின் சொரூபம் எனக்கு விளங்குகிறது. அதுவென்னவெனச் சொல்லுகிறான். 'கோல மாமஞ்ஞைதன்னிற் குலவிய குமரன்றன்னைப் பாலனென்றிருந்தேனந்நாள் பரிசிவை யுணர்ந்திலேனால், மாலயன்றனக்கும் மற்றை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ' எனவும், 'ஒற்றென முன்னம் வந்தோனொரு தனிவேலோன்றன்னைப் பற்றிலன் கின்றன பராபர முதல்வனென்றே சொற்றனன் சொற்றவெல்லாந் துணிபெனக் கொண்டிலேன் யான் இற்றை யிப்பொழுதிலீசனிவனெனுந் தன்மைகண்டேன்' எனவும் 'மெய்யுயர் வடிவங்கொண்டு மேவிய தூதன் சொற்ற, வாய்மைகள் சாதமம்மாமற்றியான் பெற்றவண்ட, வாயவை முழுதுமற்று மறுமுகம் படைத்த செம்மல்—தூய நற்பதரோமத்திற்றோன்றியே நிற்குமன்றே' எனவும், தம்பியாகிய சிங்கமுகனும் இளம் பாலகனும் இரணியனும் மந்திராலோசனையிலும் பின்னும் கூறியதை ஞாபகத்தில் வைத்து 'இங்கெனதுயிர்போலுற்ற விளவலுமிளைய சேயும் செங்கையில் வேலோனறன்னைச் சிறுவனென்றெண்ணல் கண்டாய் பங்கயன் முதலோர் காணுப் பரமனேயாகுமென்று நங்கவர் மொழிந்தவாறு சாதமே யானதன்றே' எனவும் கடவுளின் உண்மையை யறிந்த சூரபன்மன் பின்னும் சொல்லுகின்றான். 'ஏதிலமரர் தம்மை யான் சிறைசெய்த வெல்லாந் தீதெனவுரைத்தார் பல்லோ ரன்னதன் செயற்கையிலே வேதமுமயனுமேனை விண்ணவர் பலருங்காணு—நாதனிங்கணுகப் பெற்றேன் நற்றவப் பயன்றனால்' எனவும் கூறி மனமுருகிய சூரபன்மனுக்கு அடிமைப்படும் காலஞ் சமீபித்ததனால் விச்சுவரூபம் நீங்கி முன்னைய மயிராரூட வடிவத்தைக் காண்பித்து அச்சூரனுக்குச் செய்த அனுக்கிரகத்தை போதகமளித்து மாற்றி மயக்கி அவனைச் சங்காரத்து அவனுடலை இரண்டாக்கி மயில் சேவலாய் வந்து பின்னும் யுத்தஞ்செய்யக் கருதி வந்தான். அது—ஆட்படு நெறியிற் சேர்த்து மாதிபிறழ்ந்தகு தயக்கத்—தாட்படை மயூரமாகித் தன்னிகரில்லாச் சூரன்—காட்படையுளத்தனைக் கடவுளரியலபோக ஞாட்பியல் செருக்கின வந்தான ஞானநாயகன்றன் முன்னம், என வருதல் காண்க. ஆட்டுவித்தாலாரொருவ ராடாதாரே எனபதும், காட்டுவித்தாலாரொருவர் காணாதாரே கருதுவித்தாலாரொருவர் கருதாதாரே' எனனும் உபதேசமொழி சிந்திக்கற்பாலது.

செருக்கோடுஞான நாயகராகிய குமாரபெருமான் முன்னிலையில் வந்த சூரபன்மன் கொண்டமயில் சேவலின் மல வலியையடக்கி அடிமைக்கொள்ளத் திருவுளங்கொண்டு திருவருள் நோக்கமாகிய சட்சுதீக்ஷை செய்தருளி ஆட்கொண்டருளினார். அது 'மருவு கெழுபுள்ளனே பால வந்திடு சூரனைத்தையருளைக்கூ நாட்டஞ் சேர்தவாவ கவனங்கல நீங்கித் தெருள கெழு

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் தேவனாகும் யோகமார்க்கத்தைப் போதிக்கும் பகவான் அரவிந்தர்

## அவரது வாழ்க்கை வரலாறும் யோகசித்தியும்

(சென்ற மாதம் 5—8—44 கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடந்த அரவிந்தர் ஜயந்தியில் திரு. க. இராமச்சந்திரன் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவி வரையப்பட்டது)

(முற்றொடர்)

அரவிந்தரின் வரோடா வாழ்வின் கடைசி ஐந்தாண்டும் அவர் உடல் மகாராசா சேவையை முன்போற் செய்து கொண்டிருந்த போதிலும் அவர் உள்ளமோ தேசப்பணியில் ஈடுபட்டிருந்தது. ஆரம்பத்தில் அப்பணியை மறைமுகமாகவே செய்தனர். ஆனல் வங்காளப் பிரிவினையும், அதைத் தொடர்ந்து வந்த அடக்குமுறையும், காங்கிரசின் லட்சியங்குறித்து மிதவாதிகட்கும் தீவிரவாதிகட்கும் மிடையே ஏற்பட்ட அபிப்பிராய பேதமும் அவரை முன்னணிக்கு இழுத்து விட்டன. மஹாராஷ்டிர சிங்கம் பாலகங்காதர திலகர், பாஞ்சாலகேசரி லாலாலஜபதிராய் தமிழ்நாட்டின் தியாகி சிதம்பரம்பிள்ளை முதலியோர் ஆரம்பித்த புதுத்தேசியக் கட்சியைச் சேர்ந்து, காங்கிரஸைக் கைப்பற்றி அதின்மூலம் சுயராச்சியம் பெறவேண்டுமென்ற தேசாவேசத்துடன், 1906-ம் ஆண்டு ஜூன் மாசத்தில் அரவிந்தர் வரோடா உத்தியோகத்தைத் துறந்து வெளிக்கிளம்பினர். அடுத்த ஆண்டில் காங்கிரஸ் மகாசபை சூரத்தில் கூடியபோது கலைக்கப்பட்டுக் கூடித் தேசபக்தர்கள் ஒருங்குகூடி அரவிந்தர் தலைமையில் பல தீர்மானங்களை நிறைவேற்றினர். அப்போது திலகர் அவர்கட்குச் சுயராச்சியத் தத்துவத்தை விளக்கினர். இவ்விரு பெருந்தியாகிகளால், கர்மயோகிகளால், அன்று விதைக்கப்பட்ட விராசுதந்தரமே பன்னிரண்டாண்டுகட்குப்பின், காந்தியடிகளின் ஆதரவில் உலகத்தின் கவனத்தைப் பெற்ற பாரதமகாசபையாய் உருவெடுத்ததெனலாம்.

பின்னர் ஒருவருஷம்போல் அரவிந்தர் சுதேசிய இயக்கத்தில் கலந்து கல்வித் தொண்டாற்றினர். அப்போது வங்காளவாசரான பங்கிம் சந்திரசட்டர்ஜீ தம் சமூகத்திற்காகப் பாடிய 'வந்தேமாதரம்' என்னும் ஆவேசகீதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதனைத் தேச சுதந்திரத்திற்கு ஓர் சக்தி மந்திரமாக்கும் சந்தர்ப்பமும் அவருக்குக் கிடைத்தது. கல்கத்தாவில் வாரப் பதிப்பாய் வெளிவந்த வந்தேமாதரத்தை தினசரிப் பத்திரிகையாக மாற்றி அதின் ஆசிரியராக நாட்டுக்கு அளப்பரும் பணிபுரிந்தார். இவ்விதம் தேசத்தொண்டில் தீவிரமாய் ஈடுபட்டிருந்த வேளையில அடிக்கடி அவரது அந்தராத்மா தனிமையையும் யோகசாதனையையும் நாடும்படி தூண்டுவதுண்டு, அப்படிச் சென்றால் தாம் நாட்டுக்கு விளக்கிய கோரிக்கைகளை நிறைவேறுமென்றெண்ணும் அக்கட்டளைக்குச் செவிசாய்க்க விடவில்லை. திடீரென 1908-ம் ஆண்டு பங்குனி மாசத்தில அலிப்பூரில் வெடிகுண்டு வீச்சால் இரு ஆங்கிலப் பெண்கள் மாண்டனர். அத்துக்க சம்பவம் நடந்து ஒருவாரத்தில் அரவிந்தர் கைதுசெய்யப்பட்டார். தனிமையாகச் சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டதும் சிறிது மயங்கினர். "அப்பனே! அஹிம்சா தர்மத்தைக் கைக்கொண்டும் அடியேன் மீது ஏன் இந்த அபகீர்த்தி கொள்கையாம்" எனக்கலங்கினர். "அஞ்சாதே! அவசரப்படாதே! உன்னை ஆட்கொள்ளுவதற்கு இவ்விடமே பொருத்தமானது" என்று அறிவுக்குரல் உள்ளத்தி

றையும் இறைவன் உத்தரவு அளித்தான். அதின்மேல் அமைதி அடைந்தார். பகவத்கீதை போதி ஒன்று கிடைத்தது. அதை ஒழுங்காகப் பாராயணஞ்செய்து, 18-ம் அத்தியாயம், 62-ம் சுலோகம் விளக்கும் பூரண சரணாகதியே உய்வழிக்குரிய அரிய சாதனையென நன்குணர்ந்து யோகஞ்செய்தார். பரமாத்ம விஸ்வாத்ம தரிசனம் இரண்டும் கிடைத்தது. "என் தரிசனமும் யான் போர்க்களத்தில் ஓர் வீரனுக்குபதேசித்த கீதையின் உண்மை விளக்கமும் பெறவேண்டுமாயின் யான் அவதரித்த இடமாகிய சிறைச்சாலைக்குள் வீரர்கள் போல் அச்சமின்றிப் புகுந்து அதனை உங்கள் தவச்சாலையாக மாற்றுங்கள்" என்பது கிருஷ்ண பரமாத்மாவின் திருச்சித்தமபோலும். இந்த நூற்றாண்டில் ஒப்பற்ற கர்மயோகிகளாய்ச் சிறந்து விளங்கி பகவத்கீதைக்கு விளக்கவுரை செய்த திலகர், அரவிந்தர், காந்தி, ராஜாஜி ஆகிய நால்வரும் இவ்விஷயத்தில் ஓர்விதி அநுபவம் பெற்றவர்களன்றோ?

உலகப்பிரசித்திபெற்ற அலிப்பூர் சதிவழக்கு விசாரணை முடிய ஓர் ஆண்டு சென்றது. அதில் அரவிந்தர் நிரபராதியென விடுதலையடைந்தார். அவர் சார்பாக வழக்கை நடத்திய சித்தரஞ்சனதாசர் அவரின் எதிர்கால வாழ்வு குறித்து அப்போது கூறிய ஆவேசமொழிகள் தேசபந்து பூவுடல் நீத்துப் புகழுடம்பு எடுப்பதற்கு முன்னரேயே தீர்க்க தரிசனவாக்காக அமைந்தது இன்று உலகறிந்த விஷயம். விடுதலையடைந்தபின் அவர் வங்க நாட்டில அரசியல் தொடர்புடன் வாழ்ந்தது பதின்மூன்று மாசகாலமேயாகும். இந்தச் சொற்ப காலத்துள் தாய்நாட்டுக்கு வற்புறுத்தவேண்டிய அரிய பெரிய விஷயங்களையெல்லாம் உத்தரபாரப் பிரசங்கத்திலும் கர்மயோகின் என்ற வாரப்பத்திரிகைக் கட்டுரையொன்றிலும் விளக்கி முடித்தார். அவர் அன்று கோரிய திட்டங்களையே மகாத்மா காந்தி சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாகச் செய்கைக்குக் கொணர்ந்துள்ளார். இத்துடன் அரவிந்தரது வாழ்வின் முதலகாண்டம் முடிவாகின்றது.

1910ம் ஆண்டு பங்குனி மாசத்தில் புதுவையிலாரம்பித்த வாழ்வு அரிய யோககாண்டமாகும். சென்ற முப்பத்து நான்கு ஆண்டுகளையும் தவத்திலும் மோனத்திலுமே கழித்துள்ளார். இதற்கிடையில அவர் மூன்றுதரம் மாத்திரம் உலக விஷயங்களைப்பற்றித் தமது அபிப்பிராயத்தைச் சுருக்கமாய் விடுத்துள்ளார். அச்செய்திகளிலடங்கிய தீர்க்க தரிசனத்தைக் காண அவற்றை இங்கு தருகின்றேம்.

முதலாவது, போன ஐரோப்பிய யுத்தமுடிவில் சமாசாரப் பேச்சுக்கள் இனிமேல் அவ்வித யுத்தம் வராமல தடுப்பதற்கு சர்வதேசசங்கம் நிறுவ வேண்டுமென்ற அபிப்பிராயத்தைக் கூறியபோது, முதலில உலகவளர்ச்சியையும் உள்ளொளியையும் நீத்தவர்கள் என்றார் அரவிந்தர். அவை இல்லாமல் புறத்தே ஒற்றுமை காணமுடியாதென எடுத்துக்காட்டி அவர்களால் நிறுவ இருக்கும் சர்வதேச சங்கம் (League of Nations) அதில் சேரும் ஒவ்வொரு நாட்டின் பொருளாதார பண்டிதர்கள் தத்தம் தேச இயந்திரச் சரக்குகளுக்குச் சந்தை பிடிக்கும் விஷயத்தில் போட்டியும் பொறாமையும் காட்டவே முந்தியதிலும் பார்க்கப் பெரிய சண்டையில் முடியுமென எச்சரிக்கை கொடுத்தார்.

இரண்டாவதாக தற்போதைய அகோரயுத்தம் ஆரம்பித்தபின் அதின் போக்கும் முடிவுங் குறித்து நாடெங்கும ஓர்வித பீதி ஏற்பட்டிருந்தபோது உலகில் முளைத்துள்ள அசுர பூண்டுகளைக் களைந்து உலக பரிணாமத்தைத் துரிதப்படுத்தவே மஹாகாளியின் மரண நர்த்தனம் நடக்கின்றதென விளக்கி, ஜேர்மனி போ, ஜப்பானே, இந்தியாவைக் கைப்பற்றப் போவதில்லையென நேசக்கட்சியினர்க்கும் இந்திய மக்களுக்கும் உறுதிகூறினர்.

மூன்றாவது ஸேர் ஸ்ராப்போர்ட் கிரிப்ஸ் தூதுவந்தபோது அரவிந்தர் இந்திய அரசியல் நிலைகுறித்து விடுத்த மிகவும் முக்கிய செய்தியாகும். இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே நம்பிக்கையும் நல்லுறவும் சமாதானமும ஏற்படுவதற்கு வேண்டிய உகந்த சந்தர்ப்பம வந்துள்ளதென எடுத்துக்கூறி அதை நழுவவிடாதீர்களென 1942ம் ஆண்டு பங்குனி மாசத்தில் காங்கிரஸ தலைவர்களுக்குத் தூதும் அனுப்பினர். ஆனல் இந்தியாவின் துரதிஷ்டம் காரணமாக இந்த மஹாபுருஷரின் சொல்லு அம்பலத்தில் ஏறவில்லை. எவர் உண்மையான தீர்க்கதரிசி யென்பதையும் எவர்களின் தீர்மானம் மயக்க அறிவிலிருந்து பிறந்ததென்பதையும் சென்ற இரண்டாண்டு நிகழ்ச்சிகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டிவிட்டன.

சிவாஜியின் செங்கோலை ஓங்கச் செய்தது சமர்த்த இராமதாசரின் ஆத்மசக்தி உதயபுரிக்கு உதவியாயிருந்தது தயானந்தரின் தபோபலம். அதேபோல், இந்தியாவின் பலமாகாணங்கள் காங்கிரஸின் அரசாட்சியிலிருந்தபோது சென்னை தலைசிறந்து விளங்கியது தென்னாட்டில் இன்றுள்ள மூன்று ஆச்சிரமங்களிலிருந்து வீசும் தவக்கனல் காரணமாமேயாம். இதனைநன்குணர்ந்த யோகியாம் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியரே முதல்மந்திரியாயிருந்து பற்றற்றுப் பணிசெய்தவர். பெருந் தலைவர்களுள் அவர் ஒருவரே அரவிந்தரின தீர்க்க தரிசன வாக்கை ஏற்றுத் தேசத்துக்கு விளக்கினர். வடநாட்டார் செவி சாய்க்க மறுத்தனர்; அவரைத் தூற்றினர்; கையாண்டி செய்தனர். ஆனல் "கண்ணன் காட்டிய வழி"யைப் பின்பற்றும் ராஜாஜி தமது கொள்கையில இன்னும பின்வாங்கவில்லை. அதிலுள்ள நியாயத்தையும் அதனால் தேசம் அடையும் நன்மையையும் அவர் கவனித்தல்லவென்ற தமது கட்சியின வெறுப்பையோ தோல்வியையோ நோக்கவில்லை.

நிற்க, அரவிந்தரின் யோகவாழ்வையும் அவரது உபதேசத்தையும் கவனிக்குமுன் வங்காளத்தில் பிறந்து, இங்கிலாந்தில் கல்விகற்று, வரோடாவில உத்தியோகம் பார்த்த இவர் தமிழ் நாட்டுக்கு ஏன் வரவேண்டுமென்பதைச் சிறிது ஆராய்வோம். அவர் இறைவன் சித்தப்படி நடந்ததேயல்லாமல் அரவிந்தரின சொந்த சங்கற்பப்படியல்ல. சந்தர்ப்பம் கிடைக்குமட்டும் தாய்நாடு திரும்பிப் போகவே தாம எண்ணியிருந்ததாக அவரே கூறியுள்ளார். ஆனல இருவருள் அவரை அவர் கோரும பழைய சுத்தமாககத் தொண்டு செய்ய ...பட்டதாயுள்ள தமிழ்நாட்டில் ... வாழச் செய்தது விட்டது. ஆத்தியாவிற்குப் பாரதத்தே சம் என்னும் பேர் வருமுன்னரேயே, தமிழரசி கொலுவிற்றிருந்த குமரிநாடு மேற்கே மடகாஸ்கரிலிருந்து கிழக்கே சந்தாத் தீவுகள் வரைக்கும் விரிந்திருந்த காலத்து சிவவழிபாடு உலகெங்கணும் பரவியிருந்ததென்பது ஆராய்ச்சியாளர் முடிவு. ஆனல் இவ்விதம் எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய சிவன் எங்கள் தென்னாட்டில்தான் சித்தனாய், ஆனந்தக்கூத்தனாய் திருவிளையாடல்கள் செய்துள்ளான். திருவாலவாய் அத்தனும் சித்தன்; திருவண்ணாமலை அப்பனும் சித்தனே. சைவத்திருமறைகளுக்குப்பின் சில நூற்றாண்டுகளாய் சித்தர் பேர் கேட்கப்படவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில வாழ்ந்த தாயுமானர் வேதாந்த சித்தாந்த சமரசநிலை பெறவிருந்தக் சித்தர் கணத்தைப் போற்றி அவர்களைத் தமிழ்மக்களுக்கு மறுபடியும் நினைவூட்டியுள்ளார். எனினும சென்ற நூற்றாண்டில் அவதரித்த ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் ஒருவரே அண்மையில், இத்தலபரவாழ்வு சாகாநிலை முதலாம் உயரியதத்துவங்களைப்பற்றிச் சித்தர் வாக்கில உபதேசித்தவர். அவரின் தீர்க்க தரிசன வாக்குகள் பல. அவற்றின்படியே இதுவரையில் அநேக சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அரவிந்தரின தென்னாட்டு வருகையும பகவான ரமணமூர்த்தியின அவதாரமும் 1873-ம் ஆண்டில அருட்பிரகாச வள்ளலாரால் கூறப்பட்ட முக்கிய சம்பவங்களாகும். அவர்கட்கு ஆன்மநேய ஒருமைப்பாட்டை வற்புறுத்தி, "நாம் இனி உலகெங்கும உலாவுவோம" என்றுகூறி, சித்திவளாகத்தில ஒளியாகி அருவாகி சுவாமிகள் மறைந்த அடுத்த ஆண்டிலேயே உலகில சகோதரத்துவத்தைப் போதிக்கும பிரமஞான சபை (Theosophical Society) நிறுவப்பட்டது. அதைத்தொடர்ந்து அருகில பறாய் சங்கமூர் தோன்றியது. இத்தொண்டுகளெல்லாவற்றிற்கும் தூண்டுகோலாயிருந்த சித்தராகிய மகாத்மா இராமலிங்கம் ... இடம் வங்கக்கரையான பாண்டிச்சேரி அமைதலாக குறிப்பிட்டுள்ளார். எனவே, அரவிந்தரைத் தமிழ்நாட்டுக்கு அழைத்ததும அருட்பிரகாச வள்ளலாரின ஆத்மசக்தியேயென்று கூறுதல் மிகையாகாது.

(வரும்)

## வயல் விற்பனவு விளம்பரம்

தற்போது பயிரிடப்படுவதும், நல்ல விளைவுள்ளதும் கனகராயன் குளத்திலுள்ளதுமான 25 ஏக்கர் வயல் விலைக்கிருக்கிறது. வயல் பஸ் போக்குவரத்துத் தெருவோரத்திலுண்டு. விரும்பியவர்களுக்குப் பகுதிகளாகவும் விற்கப்படும். விலை ரூபா 550 அல்லது கிட்டிய தொகை கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதுக.

வ. நாகலிங்கம்,
F. M. S. Pensioner,
மூளாய்ரோட்,
வட்டுக்கோட்டை.

Mis 103 4&7&11-9 44

## பொதுஜனப் பாதுகாப்புப்பகுதி
## கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

வருடாந்தக் கையிருப்பைக் கணக்கெடுப்பதற்காக எல்லாக் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனங்களும் (கொழும்பிலும் வெளியூர்களிலும்) 1944ம் ஆண்டு அக்டோபர்மாதம் 1ம் திகதிமுதல் 4ம் திகதிவரை (இருதினங்களும் உட்பட) மூடப்படும்.

இத்தினங்களில் கூட்டுறவு ஸ்டோர்களுக்கும் மற்றவர்களுக்கும் சாமான்கள் கொடுக்கப்படமாட்டா.

சி. ரகுநாதன்,
ஸீனியர் உதவி ரிஜிஸ்திரார்,
கூட்டுறவுச் சங்கங்கள்

கொழும்பு, 1—9—44.
G 68 18&21&25&28.9.44.

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

யெனக் கூறித் தானும் கவலைப்பட்டார். நானும் அதிக கவலையடைந்தேனாய், என் தாயாரைப் பார்த்து அம்மா, கடவுளைப் பிரார்த்தித்தால் எல்லா இடையூறும் நீங்குமென்று நீங்களும் சொல்லுகிறீர்கள், என் ஐயாவுஞ் சொன்னார்; ஆனபடியால் இன்றுதொடக்கம் மாலைக்காலத்தில் எங்கள் ஐயனார் கோவிலுக்குப் போகும்போது என்னையும் உடன் கூட்டிக்கொண்டு போகிறீர்களா என்று கேட்க என்னைப்பெற்றவள் "ஆம, கண்ணே" என்று சொல்ல நான் அதிக மனவாறுதல் அடைந்தேன்...," எனக் கூறுவதற்கிடையில், விசுவநாதன் இராஞ்சிதத்தைப் பார்த்து "இராஞ்சிதம், நீங்கள் வைஷ்ணசமயத்தைச் சேர்ந்தவளீர்களென்று முந்தச் சொன்னாயே, சைவமக்களல்லாமல் வைஷ்ணவர்களும் ஐயனாரை வழிபடும் வழக்கம் உங்களூரில் உண்டா" என்று வினவினான். "ஐயா, உங்களுடைய இந்த ஊரில வழக்கமென்ன வென்பதை நான இன்னுமறியேன; எங்களூரில் ஐயனாரைத்தான் சைவர் வைஷ்ணவரென்ற வேற்றுமையின்றி இருபகுதியாரும் பக்தியோடு வழிபட்டு வருவார்கள்; எங்கள் அரியினருளும் உங்கள் அரனுடைய அருளும் பெற்று ஐயனார் அவதாரஞ் செய்தமையினாலே அவரை அரிஹரபுத்திரர் என்று எல்லாரும் பாராட்டுவார்கள்; பொங்கல் பூசை செய்து வழிபடுவார்கள்; வேதங்களிற் சில அவரை உருத்திரமூர்த்தியின் அம்சமென்றுங் கூறுமாம். அவரே எங்கள் குலதெய்வம்; அவர் அருளுடையவர், புதுமையுடையவர்..." என்று இராஞ்சிதம் சொல்ல விசுவநாதன் கேட்டு வியப்படைந்து அரிகரபுத்திரரைத் தியானித்து மேலே பார்த்துக் கும்பிட்டுக்கொண்டு பின்னர் இராஞ்சிதத்தின் வரலாற்றைக் கேட்பானாயினன். "ஐயா, அன்று பொழுதுபடும் நேரத்தில் எங்கள் வீட்டின் அயலிலுள்ளதாகிய ஐயனார்கோவிலுக்கு என் தாயாருடன் கூடிக்கொண்டு நான் அங்கே போகும்போது பூசை நிகழ, நான் அந்த மூர்த்தியைத் தரிசித்து வணங்கி என் குறைகளையெல்லாம் மனத்தில் நினைந்து முறையிட்டேன்; அன்று முதலாகத் தாயார் தினமும் மாலைவேளையில் தாம் கோயிலுக்குப் போம்போதெல்லாம் என்னையும் உடனழைத்துச் செல்ல நானும் போய்ப்போய்க் கும்பிட்டு என் குறையை அந்தப் பெருமானிடத்தில் முறையிட்டு வந்தேன்; ஆனாலும் அவருடைய நோய் குறைந்தபாடில்லை யென்று பெற்றார் வந்து சொல்லக் கேட்டுக் கேட்டு வருந்தினேன்; ஒருநாள் மத்தியானத்தின்மேல என் மாமனார் வீட்டிற்குப்போன என் பெற்றாரிருவரும் அன்று மாலைக்காலமாகியும் மீண்டு வந்திலர். அவர்கள் வாராமையையிட்டு நான் சஞ்சலப்பட்டேன்; எங்கள் வீட்டிலிருந்த வேலைக்காரச் சிறுவனையும் மாமனார் வீட்டிற்குப் போய் ஏதும் விசேஷமோ எனப் பார்த்துவா என்று சொல்லி அனுப்பிவிட்டேன்; கோயிலில் மணி கேட்டது; உடனே, நான் எனக்குத் துணையாகவிருந்த வேலைக்காரச் சிறுமியை எங்கள் வீட்டிற்குக் காவலாக வைத்துவிட்டு, வீட்டின் பக்கத்திலுள்ளதானே கோயில், நாளும் பொழுதும் போய்க் கும்பிடும் இடந்தானே என்ற எண்ணத்தினாலும், என் மனத்திற் குடிகொண்ட கவலை அதிகப்பட்டமையினாலும், ஐயனாருக்குப் போய் முறையிட்டால் மன ஆறுதலுண்டாகுமென்ற சிந்தையினாலும், நிலாக்காலமாயிருந்தமையினாலும், தன்னந்தனியே புறப்பட்டுக் கோயிலுக்குப் போனேன்; அங்கே பூசை நடந்தது, தரிசனஞ் செய்தேன்; வாயாரத் தோத்திரம் பண்ணினேன்; கவலைமேலீட்டினாலும் சில நாட்களாக வேளைக்குப் போசனஞ் செய்யாமையினாலுண்டான தேகமெலிவினாலும் எனக்கு ஒரு ஆயசமுண்டாக, நான் அந்தச் சந்நிதானத்திலே நிற்கும் ஒரு தூணத்திற் சாய்ந்தபடி மெல்ல இருந்துவிட்டேன்; பூசை முடிந்ததைத்தானும் நான் அந்தநேரம் அறியேன். கோயிற் பூசகர் திருநீறு திருமண புஷ்பம் தீர்த்தம் முதலிய பிரசாதங்களைத் தருமபடி என்னிடம் வருதலும், நான் அயர்ச்சி நீங்கித் திடுக்குற்று எழுந்து இரு கைகளையும் நீட்டி அவற்றை ஏற்றுத் தரித்துக் கொண்டு, தீர்த்தத்தை இருகரங் கோலி நீட்டி ஏற்று உட்கொண்டேன்; அதனால் என்னிடத்திருந்த ஆயாசம் நீங்கியது.

### எழுதாவிதிக்கு அழுதாவதென்ன?

சுவாமி கும்பிடவந்தவர்களுட் பலர் போய்விட இரண்டுமூன்று பேர் பெண்கள்தாம் அங்கே நின்றார்கள்; அவர்களும் ஐயனாரிடத்தில் தங்கள் குறையை முறையிட, நானும் என் குறையைக் கவலைமேலீட்டினால் வாயிட்டு முறையிட்டேன்; அரியர புதல்வா, ஐயனே, ஆன்மகோடிகளைக் காத்தருளுந் தெய்வமே! என் முறையீடு உன் திருச்செவிகளில் ஏறவில்லையா! நான் படுந்துயரம் உன் திருவுளத்திற்குத் தெரியாதா? பூரணை மணவாளா, புட்கலை கணவா? உன் பெண்பிள்ளைகளில் யானுமொருத்தியல்லேனோ! இந்தச் சின்னவயசில் என்னை ஏன் இப்படிக் கலங்க வைத்தாய்? செண்டாயுதனே, இந்திரன் தன் தேவியை உன்னிடம் அடைக்கலமாக வைத்துக் கைலைக்குப்போய்விட, சூரனுடைய தங்கையாகிய அசமுகி தன்னந்தனியேயிருந்த அந்த இந்திராணிக்கு இடர்செய்ய வர, வீரமாகாளரென்னும் படைத்தலைவரைக் கொண்டு அந்த அசமுகிக்குத் தண்டனை செய்வித்துச் சசியைக் காத்தருள் செய்தாயென்று சைவமக்கள் உன்னைப் பாராட்டுகின்றார்களே; அந்த அருள் இப்பொழுது எங்கே மறைந்துவிட்டது! அப்பனே! என் அன்பருக்கு ஏதும் ஆபத்து வாராமற் காக்கவொண்ணாதா! என்று ஓலமிட்டேன்; இதற்கிடையில் என் தாயார் என்னைக் கூப்பிட்டபடி கோவிலுக்கு ஓடிவந்து, கண்ணே இங்கா நிற்கின்றாய்? எழுந்து வா; எழுதாவிதிக்கு அழுதாவதென்ன? உன்னை உன் அத்தான் பார்க்க விரும்புகிறார்; உன் அப்பா 'கார்' கொண்டு வருவார், அதற்கிடையிற் புறப்பட ஆயத்தஞ் செய்" என்று சொல்லி வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகும்போது, நான் திடுதிடுத்து அம்மா! அவருடைய சுகம் எப்படி? என்னைக் கூட்டிக்கொண்டு வரும்படி அவர்தாம் உங்களிடஞ் சொன்னாரா என்று ஆவலுடன் கேட்டேன்; "எல்லாஞ் சுகமடி மகளே, பதறாமல் வா; உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறார்; உன் பெயரையே மயக்கம் நீங்கி நல்லறிவுண்டாகும்போது சொல்லுகிறார்" என்று தாயார் கவலையோடு சொன்னார்; இருவரும் எங்கள் வீட்டிற்போய்ச் சேர்ந்தோம்; சிறிது நேரத்தில் காரும் வந்து சேர்ந்த[illegible] "[illegible] புறப்படு" என்று சொல்லிக்கொண்டே அவர் இரதத்தை விட்டிறங்கி வந்தார்; நான் உடுத்த அணியோடு புறப்பட்டு இரதத்தில் ஏறினேன்; நானும் என் பெற்றாரும் வேலைக்காரச் சிறுவனையும் சிறுமியையும் வீட்டிற்குக் காவலாக வைத்துவிட்[illegible]ம்; ரதமும் அதி[illegible]சென்றது. (வரும்)

## நடனமாதின் ஒட்டியாணம் திருடியவர் விடுதலையடைந்தார்

யாழ்ப்பாணம் குரும்பசிட்டிவாசியாகிய கந்தையா-சீவரெத்தினம் என்பவர்மீது கடந்த யூலைமாதம் 23ந் திகதியளவில் நாவலர் சந்திக்குச் சமீபமாக வசிக்கும் 'செல்லக் கண்டுசெற்'றைச் சேர்ந்த பருவதபத்தினி என்னும் நடனமங்கைக்குச் சொந்தமான 35 ரூபாய் பெறுமதியுள்ள வெள்ளி ஒட்டியாணத்தைக் களவாடியதாக யாழ்ப்பாணம் பொலிஸ் ஸ்டேசனைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. ஆர். டபிள்யூ. எம். அபயசேகரன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் நீதிபதி திரு. ஜே.இ.வ. அலெஸ் முன்பாக விசாரணைக்கெடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக சப் இன்ஸ்பெக்டர் உதவியுடன் நியாயதுரந்தரர் திரு. சாம். வ. சபாபதியும், எதிரியின் சார்பாக நியாயதுரந்தரர் திரு. ஆர். ஆர். நல்லையாவும் விவாதித்தார்கள்.

விசாரணையின்போது பருவதபத்தினி, இராசையா, இராசு முதலியோர் சாட்சியங் கூறினர்.

நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

## புதிய ஜெர்மன் விமானம்

லண்டன், செப் 10

ராய்ட்டரின் விசேஷ நிருபர் பெல்ஜியத்திலிருந்து தெரிவிப்பதாவது:- பெட்ரோலுக்குப் பதில் காற்றை உபயோகித்துக்கொண்டு பறக்கும்புதிய ஜெர்மன்விமானமொன்று பெல்ஜியத்தில் ஆல்பர்ட் கால்வாய் பகுதியில் நேசவிமான எதிர்ப்புப் பீரங்கிகளால் சுட்டுவீழ்த்தப்பட்டது. இவ்விமானத்திற்கு 2 யந்திரங்கள் உள்ளன. இந்த விமானம் மணிக்கு 900 மைல் செல்லும் என்று தெரிகிறது.

## நல்லூர்ச் சிவன் கோவிலில் நவராத்திரி பூஜை

நிகழும் தாரணவருடம் புரட்டாதிமாதம் 3-ந் திகதி (18-9-44) திங்கட்கிழமைமுதல் வரும்நவராத்திரி தினங்களில், நல்லூர்ச் சிவன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கமலாம்பிகா தேவிக்குப் பகலில் விசேஷ அபிஷேகமும் நவோத்தர சத சங்காபிஷேகமும், சாயந்தரந்தோறும் ஸ்ரீ சக்ரயந்திர பூஜையும், 12-ந் திகதி புதன்கிழமை (27-9-44) பகல் விஜயதசமி உற்சவமும் நடைபெறுமென அறியவாரேம்.

## தீவிபத்து

கல்கத்தா, செப் 7

கல்கத்தாவில் சிகரெட் கம்பெனியொன்று இருந்த ஐந்தடுக்கு மாளிகையொன்று சில தினங்களுக்குள் தீப்பற்றிக்கொண்டது.

மனேஜர் தேவை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சித்தன்கேணி ஐக்கியசங்கக் கடைக்கு ஒரு மனேஜர் தேவை. மாசவேதனம் ரூபா 50. பிணையாக 500 ரூபா கட்டுதல் வேண்டும். விண்ணப்பஞ் செய்பவர் தமது திறமையைப் பற்றிய தராதரப் பத்திரங்களோடு விண்ணப்பப் பத்திரத்தை, இந்தச் செப்டம்பர்மாசம் 25-ந் தேதிக்குமுன், சித்தன்கேணி, ஐக்கியசங்கக் காரியதரிசி, வட்டுக்கோட்டை யென்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

Mis 113 14-9-44

## திருச்சி ரேடியோ

( † இசைத்தட்டு )

### வெள்ளி செப் 15

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 நந்தன் சரித்திர கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 தஞ்சாவூர் ஜானகி அம்மாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 எம் ஜீ நாகோஜி ராவ் பாட்டு 5-40 குரான் ஷரீப் 6 செம்பொன்னார்கோவில் ஆர் சி குஞ்சிதபாலம் பிள்ளை ஆர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஐயம் சித்திரம் 8 செம்பொன்னார் கோவில் ஆர் குஞ்சிதபாதம்பிள்ளை ஆர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை நாகஸ்வரம 8-45 எம் வி நாகோசிராவ் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### சனி செப் 16

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 டி என் ராஜாரத்னம் பிள்ளை நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திரை இசை † 9 முடிவு.

1 பாபநாசம் எஸ். பாலசரஸ்வதி வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பிய சங்கீதம் † 2 தமிழில் செய்திகள் 2-05 திருக்கோடிகாவல் ஆர். கோவிந்தராஜபிள்ளை பாட்டு 2-30 முடிவு.

மாலை: 5 பாபநாசம் எஸ் பாலசரஸ்வதி வயலின் 5-40 திருவாய்மொழி 6 திருக்கோடிகாவல ஆர் கோவிந்தராசபிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 பணத்திற்கு பண்டம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸிலுள்ளபடி வி வெங்கடகிரியப்பா வீணை 9-15 டோலக் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 பதவர்ணம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### ஞாயிறு செப் 17

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 நடனகீதம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 இசைத்கதம்பம்† 9 முடிவு.

11 கதம்பம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2-05 இசைவகை † 2-30 முடிவு.

மாலை: 5 எம் ஆர் சிவராமன் பாட்டு 5-40 தேவாராதனை 6 எம் கே கனகாம்பாள் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 வெற்றிக்கு மூதுரை 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள்7-45 எம் ஆர் சிவராமன் பாட்டு 8-30 எம் கே கனகாம்பாள் வீணை 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 திருப்புகழ் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### திங்கள் செப் 18

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 குற்றாலக்குறவஞ்சி 7 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆம்பல் டி ராமச்சந்திரன் நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் ராமஸ்வாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி பரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஆம்பல் டி ராமச்சந்திரன் நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆர் ராமஸ்வாமி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 மணிமேகலை(?) (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில செய்திகள் 7-45 செய்திச் சித்திரம் 8 என வி வஸந்தகோகிலம் பாட்டு9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஜி ஐ (ஆங்கிலம்) 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்போரூர்ச் சந்நிதிமுறை

திருமயிலை, திருவாளர். சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்

திருப்போரூரென்பது சென்னைக்குத் தெற்கே இருபது மைலில் உள்ள ஓர் சுப்பிரமணிய தலம். இத்தலம் சிதம்பர சுவாமிகள் என்னும் வீரசைவப் பெரியாரால் சிறப்புற்றது. இப்பெரியாருடைய சமாதி திருப்போரூர்க் கோயிலுக்கு வடக்கேயுள்ள கண்ணுவப் பேட்டை என்னும் கிராமத்திலுள்ளது. சிதம்பர சுவாமிகள் இற்றைக்கு முன்னூறு வருடங்களுக்குமுன் இருந்தவர். இவர் திருப்போரூர்க் கந்தசுவாமிமீது பாடிய பாடல்களின் தொகுதியே திருப்போரூர்ச் சந்நிதி முறையென்னும் பெயரோடு உலவுவது. சுவாமிகள் பாடல் திருவாசகத்தைத் தழுவி இருப்பது படிப்பவர்களுக்குப் புலனும். இவர் உரையெழுதுவதிலும் மிக வல்லவரென்பது ஒழிவிலொடுக்கவுரை, கொலைமறுத்தலுரை, வைராக்கிய சதகவுரை, வைராக்கிய தீபவுரை, அவிரோதவுந்தியாருரை முதலியவற்றால் அறியலாம். அவ்வுரைகளில் திருவாசகம், தேவாரம் முதலியபல நூல்களிலிருந்து பிரயோகங்கள் காட்டியிருப்பது அவருடைய சைவ நூற் பயிற்சியைக் காட்டுகின்றது. சந்நிதி முறையின் முதற் பாகமாகிய பிள்ளைத்தமிழின் காப்புப் பருவத்தில் திருநீறு, உருத்திராக்கம், பஞ்சாக்கரம் முதலிய சிவ சாதனங்களைப் போற்றியிருப்பது சுவாமிகளின் சைவப்பற்றின் மிகுதியை நனி விளக்குவதாகும். இதர பிள்ளைத்தமிழ்களொன்றிலும் இச்சாதனங்களின் சிறப்பு பேசப்படாமை இவருடைய சமய பக்தியைப் புலப்படுத்துகின்றது. பல இடங்களில் நக்கீரர், அருணகிரியார் முதலியோரைப் போற்றுதல் கவனிக்கத்தக்கது. அருணகிரியாரைப் போல சுவாமிகளும் சம்பந்தர் புரிந்த அற்புதங்களை முருகர் புரிந்ததாக எடுத்துதிக்கின்றார். திருப்போரூர்ச் சந்நிதிமுறையே முதன்முதல் ஏற்பட்ட சந்நிதி முறையாகும், திருத்தணிகைச் சந்நிதிமுறை முதலியன இதற்குப் பின் வந்தவையாம். இச்சந்நிதி முறையிலுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் இன்பச் சுவையுள்ளது. படிக்கப் படிக்கப் பக்தியை விளைப்பது. சில பாடல்களின் அருமைப்பாடுகளை விளக்குவாம்:—

ஆதிபகவன் ஞானவடி வழலிற்
பூத்தது நித்தியமாய்
அணிந்தோர் தமக்கு வசிகாமா
யருந்துரோர்க்கட காரமுதாய்
தீதியற்றும் பசுமலத்தைச் சேகு
மொரு நற்குறிகாட்டி
திகழ் பேரின்பக் கடலூட்டி
நிறைபுகழ் வெண்டிருநீறே.

என்று திருநீற்றின் பெருமையைப் பாராட்டுவது வேறு நூல்களிற் காண்பதரிது.

விதையா யிருக்கு மைந்தெழுத்தும்
வேதாகமு முத்தமிழும்
விளங்குஞ் சரியாதிக ஞானமும்
விருக்ஷ மெய்ச்சிவ மதமுஞ்
சுதையாதற்குத் திருநீறுஞ் சோரு
நயனத் திருமணியும்
துகடீர் மதநி விரசெறிபின்
தொடர்புஞ் செடிதீர் மெய்
யடியார்
இதையால யதனைப் பிரியா தங்கிரு
டீர் ஞானமணி விளக்கும்
இலங்கு மவுனத் தாளும் பாத
நூபுரமுஞ் சதங்கையுஞ்
சிதையா தளிக்கு மெய்யறிவைச்
சுழுத்துஞ் சுழுமுனைச் சிறையமேலே
மருளுமிந்தப் போரூராசுறுமேயஞ்
சிதைமேலே.

ஸ்ரீ பஞ்சாக்கரம், வேதாகமம், தேவாரம், திருநீறு, உருத்திராக்கம், சரியையாதி சிவமார்க்கங்கள் முதலியவற்றை இப்பாடலில் அழகுபட எடுத்து விதந்திருப்பது படித்துப் படித்து இன்புறத்தக்கதாம்.

ஆடியார் நிமலத் திருவசத்துளன்பு
பொறுமை யவா வறுத்தல்
அடிப்பாங்கமைத்து மலக்காட்
டத் தநிஞானக் கனலூட்டி
மடியாதிருந்த வுயிர்க்கலசம் வழிய
வருட்பேருலை வார்த்து
மாறுப் பெருமைச் சிவானந்த
மதுரச்சோறு தினம் பொங்கி
விடியாச் சீவபோத விருள் வீய
மவுனச் சுடர் விளக்கு
விளக்கியிருந்த படியிருந்து
மேலாஞ் சிற்றில் விளையாடுஞ்
செடி தீரகத்தார் புகழ்வாலே சிறு
வா சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறி
யேஞ் சிற்றில் சிதைபேலே

சிவானந்தமாகிய திருவமுதைச் சமைக்கும் வழி கூறுகின்றார் ஆசிரியர், அதற்குச் சாதனங்கள் அன்பு, பொறுமை, அவாவறுத்தல் ஞானம் முதலாயினவென்று விளக்கிக் காட்டுகின்றார் ஆசிரியர்.

பூவேபூவிற் பரிமளமே யப்பூ நிறை
சுவை நறவே
பொங்கும் கடலே கடவிலுதித்
தெழு புனித தெள்ளமுதே
காவேகாவிற் கொஞ்சும் பஞ்சவனக்
கடவுட் கிளியே
கண்ணே கண்ணுறு பாவாய்
பூவாய் கனியே கனிரசமே
தேவ தேவர் சிரோமணியே
யென் சிருயிரே யுயிரிற்
செம்பொருளே யருளே முழு
மணியே மணியிற் றேசுகமே
மூவாமறையே மறையின் பொரு
ளே முத்தந்தருளே
முத்தமிழ் நற்சமரப் பதிவாயக
முத்தந்தருளே.

இது பக்தியை விளைக்கத்தக்க பாசுரம். இதனை "பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத வின்பம்" என்னுந் திருவிளையாடல் அடியோடு ஒப்பிடத்தக்கது,

கருத்தே புகுந்து சகிகாட்டுங்
கண்ணே வருக மெய்ஞானக்
கரும்பே வருக கருணை பொழி
காரே வருக வானந்தப்
பெருக்கே வருக யாங்கள் பெறும்
பேறே வருக மறைசொல்
கிளிப்
பிள்ளாய் வருக பிறங்கு தெய்
வபெம்மான்வருக குறமடந்தை
தருக்கே வருக மிடியாறநூன் மரு
வே வருக மன்பனைக்கோர்
தஞ்சே வருக வெம்மையளிக்குந்
தாயே வருக பவபிணிக்கு
மருந்தே வருக சமரபுரி வாழ்வே
வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொரு
ளான வள்ளல் வருகவருகவே

போரூர் முருகன் உடற்பிணிக்கு மருத்துவனாயிருப்பது இங்குள்ளவர்களுக்குத் தெரிந்த விஷயம். ஒவ்வொரு கார்த்திகைதோறும் திரளான சனங்கள் திருப்போரூர்க்குச் சென்று வணங்குவதும் தாம் விரும்பிய இஷ்ட சித்திகளைப் (நோய் நீக்கம் முதலியன) பெறுவதும் சென்னையைச் சூழ்ந்த இடங்களில் வசிப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும்,

பேயும்போம் துயரம்போம் பிதற்றம்
போம் போகாத
நோய்போம் மிடிபோம நுவலுங்
கால—தாய்போல
நனிநினைப் போல நயந்த திருப்
போரூரன
சன்னிதியைக் கண்டுளவேதான
நோயப்பிணி பமபுஞ் சூனியம
வஞ்சநுதல்
காய் டசிவெயபுறு ... கதல்
கடிவரன

சேயமூருந் தண மாதர்கள் நணபன
நெடுவேலன்
ஆய்க்கிளி கொஞ்சும் போரியை
வந்தங்கடைவீரே

இவையிரண்டும் திருப்போரூரைத் தரிசிப்பவர்களுக்குத் தமது உடற்பிணி நீக்கம் உண்டாகும் என்பதை வலியுறுத்துவன.

## புராண மகிமை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மனத்தனுகி கின்றனன் சிறந்தோர் நோக்கால் - இருள்கெழு தரும் பொன் செம்பொனுகிய வியற்கையே போல், எனவும் வருவனவற்றால் தீக்கையின்றி பெவரும் மேற் கதியடைதல் கூடாதென்னும் உண்மையை வலியுறுத்திச் சூரனுக்கருணுநிதியாகிய பெருமான சட்சு தீக்ஷை செய்து இங்ஙனமாற்றி ஆடிமைக்கொண்டாரென்றே.

மேலும் சூரபன்மன, சிங்கமுகன் முதலியவர்கள் அவுணவமிசத்திற் பிறந்தாலும் பூர்வசென்ம புண்ணியபலத்தாலும், பின் செய்த யாகத்தின பலத்தால் சிவபெருமானிடத்திற் பெற்றுக்கொண்ட வரப்பிரசாதத்தின பலத்தாலும், பிறப்புக்குரிய கொடூரச் செயல்களைச் செய்தாரேயன்றி அறிவு முதிர்ந்த பெரியோரென்பது விளங்குகின்றது. அவுணர் செய்த கொடுமைகளும் தேவர்களைச் சுத்தராக்குதல் காரணமேயாகும். சிங்கமுகன் தமையனாகிய சூரபன்மனுக்கு எம்பெருமானின் தன்மையை விளக்கிக் கூறுகின்ற, அது, 'வேதக்காட்சிக்கு முபநிடதச்சியல் விர்ந்தபோதக் காட்சிக்கு மணலன புதியரிற்புதியன முந்தைக்கு முந்தைவன முடிவுக்கு முடிவாயதக் காதயாய் கிஞ்சுவங்கு முகுனன்றே, எனவும் ஞானந்தானுருவாகிய நாயகனியல்பை யாதும் ரேயுமாயிசைத்தி மெனமுனிவை பெனிதா மோனம் நிலைமுனிவரும் தேர்கிலனின் அந் தானுங்காணகில னின்னமும் தன் பெருந்தலைமை, எவ்வருவன முதலியனவற்றும் பெறப்படுகின்றது. பரமபதச் சுப்பிரமணியப்பெருமானென்றும் அவர் விரும்பப்பட ஆமரசை சிறைவிட்டு அடிமைப்படுமபடி கூறியுந்தானுரும்,

அன்பர்களே! இதுமட்டோ புராணங்களில் வேத வேதாந்தங்களின் உண்மைகளும் சித்தாந்தவுண்மைகளும் சுற்றும் திறம்பாது அறிவுறுத்தப்பெற்றிருக்கின்றது,

திருப்பெருந்துறையிற் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய ஆனமநாதப்பெருமான் புரூரவச் சக்கிரவர்த்திக்குத் தமக்கு உற்சவஞ்செய்ய வேண்டாமென்றும், நம் சைவசமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உற்சவங் கொண்டாடும்படியும் உபதேசித்தருளினர். அவ்வுற்சவ தெரிசனத்துக்கு தேவர்கள் முனிவர்கள் முதலியவர்களும் உயர்ந்தோருமாகிய எவர்களும் வந்தார்களென்றும், அகத்திய முனிவரும் வந்து சமுகமாயிருந்தாரென்றும் கூறப்பட்டிருக்கிறது. அகத்திய முனிவர் 'உற்சவசேவை புரிந்தார் பிறப்புமெய்ப் பற்றுப்பெ' என வியந்து கூறியுள்ளார். இத்தகைய உயர்ந்த உற்சவசேவையைச் செய்யாது, தாசியர் நடனம் முதலிய இழிவந்த செயல்களைச் செய்து அவமே குளிக்கப் போய்ச் சேறு பூசுபவர்போலாகின்றீர், ஊழத்திறமிருந்தவாறென்னே.

அன்பர்களே! புராணங்களில் சைவசாத்திர நுண்பொருள் மலிந்த பல அறியவேண்டிய சைவசித்தாந்த நுண்பொருள் பொருந்தியதால் புராணபடனம் செய்தும் செய்வித்தும் கேட்டும் சிவப்பேறடையச் சிவபிரானருள் பாலிப்பாராக.

## இணுவில் கிழக்கு ஐக்கிய சங்க 6-வது ஆண்டுவிழா

நிகழும் தாரணவருஷம் ஆவணிமீ 18உ (2-9-44) சனிக்கிழமை மாலை 3½ மணியளவில், இணுவில் சின்னத்தம்பி வைத்தியசாலை மண்டபத்தில் வடமாகாணக் கூட்டு உதவிப் பதிவு காரியஸ்தர், திரு. இ. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் ஷை விழா ஆரம்பமாயது. அத்தருணம் தலைவர் அவர்களால் 'ஐக்கியசங்கங்களின் வளர்ச்சி' என்னும் விஷயமாக ஓர் விரிவுரை நிகழ்த்தப்பட்டது. பின்பு, ஆசிரியர் க. சிற்றம்பலம் அவர்களாலும், ஆசிரியர் த. கந்தையா அவர்களாலும் ஷை சங்க வளர்ச்சியையிட்டும், காலஞ்சென்ற பண்டிதர் க. கார்த்திகேசு அவர்களின் சேவையையிட்டும் பேசப்பட்டது.

இரவு திரு. வி. மாசிலாமணிக் கோஷ்டியாரால சபையோர்க்கு ஓர் இசை விருந்தளிக்கப்பட்டது. அதன்பின் ஆசிரியர் க. சிற்றம்பலம் அவர்களால சபையோர்க்கு நன்றி கூறப்பட்டபின கூட்டம் 8½ மணியளவில் நிறைவெய்தியது.

—கடிதம்.

## சோவியத்—ஈராக் தொடர்பு

பாக்டாட், செப் 10—

இன்று தொடக்கம ஈராக்குக்கும் ருஷ்யாவுக்கு மிடையில் ராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்படும். ஈராக் அந்நியநாட்டு மந்திரிக்கு சோவியத் அந்நியநாட்டு மந்திரியான எம். மொலட்டோவ் சமர்ப்பித்த ஒரு கடிதத்தில் சோவியத் அரசினர் வெகு சமீபத்தில் ஸ்தானிகர்களைப்பரிமாறிக்கொள்ளுமென்று குறிப்பிட்டிருக்கிறார்.

## அறிவித்தல்

### யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944ம்ஆ செப்டெம்பர்மீ 18ந் திகதி திங்கட்கிழமை முதல் 24ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருட்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1 டிறைபீன் அல்லது ஸ்பிலிற் பீன் ½ அவுன்ஸ்
2 கடலைப்பருப்பு அல்லது ஸ்பிலிற் கடலை அல்லது உழுந்து ½ அவுன்ஸ்

(2) தங்களுக்குச் சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாமென இத்தாலறிவிக்கப்படுகின்றது.

E. B. கிசவீரசிங்கம்,
வடமாகாண ஏஜண்டருக்காக.
யாழ்ப்பாணம் கச்சேரி, 12—9—44.
G 71 14—9—44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 14, September 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org